


# Chezhumai

# செழுமை



**Happy Women's Day** – TIST India wishes a Happy Women's Day to all the Women Members. Who may make discovery of a woman of virtue? For her price is much higher than jewels (Proverb 31:10).

## Painting Competition for children

Many children from TIST Small Groups participated in the painting competition conducted by TIST India and illustrated beautiful and meaningful pictures on the title "Trees". Maximum participants were from Semboondi Village. TIST requests every member to participate in all the TIST activities.

**மகளிர் தின வாழ்த்துக்கள்** – TIST-நிறுவனம் அதன் மகளிர் உறுப்பினர்களுக்கு மகளிர் தின வாழ்த்துக்களைத் தேரிவித்துக்–கொள்கிறது. குணசாலியான பெண்ணை கண்டுபிடிப்பவன் யார் ? அவளுடைய விலை முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்தது.. (நிதிமொழிகள் 31:10)

## குழந்தைகளுக்கான ஓவியப் போட்டி

TIST-நிறவனத்தின் மூலமாக 'மரங்கள்' என்ற தலைப்பில் சிறுவர்களுக்கான ஓவியப்போட்டி நடைபெற்றது. இதில் குழந்தைகள் பெறுவாரியாகக் கலந்து கொண்டு அழகழகான வண்ணங்களில், அர்த்தமுள்ள வகையில் தங்களது எண்ணங்களைப் படமாக்கினார்கள். அதிகபட்ச ஓவியங்கள் 'செம்பூண்டி' கிராமத்தில் வரையப்பட்டது. TIST நிறுவனம் அனைத்து உறுப்பினர்களையும் பங்குகொள்ளும்படி அழைப்பு விடுத்திருந்தது.

TIST
The International Small Group & Tree Planting Program



**TIST India** : New No.52, Guru Ram Flats, Flat D, Venkat Ratnam Nagar, Adyar 600 020. Phone : 044 24411637, Mobile : 9840299822, Web: www.tist.org
**TIST USA** : Phone : 001 9188511917 Email : rameshn@tist.com

## TIST Women Members

## TIST பெண் அங்கத்தினர் கல்





















**TIST India** : New No.52, Guru Ram Flats, Flat D, Venkat Ratnam Nagar,
Adyar 600 020. Phone : 044 24411637, Mobile : 9840299822, Web: www.tist.org
**TIST USA** : Phone : 001 9188511917 Email : rameshn@tist.com

## Semboondy Children




### Kattiampandal & Vellaputur of Uttiramerrur

All the Small Group members of Kattiampandal & Vellaputur area are requested to introduce new Small Groups to TIST Program from your area. There should be minimum 40 Small Groups located at your area that are all within walking distance (or bicycle) of each other. To start with, every Small Group should have the capacity to plant minimum 1000 trees and over the next 5 years they should increase the tree count by minimum 30%.

During the month of February 2007, ArulparamJyothi Small Group introduced three new Small Groups from Vellaputur to TIST Program. TIST extends a big thanks to ArulparamJyothi.

## செம்பூண்டி சிறுவர்கள்




### கட்டியம்பந்தல் மற்றும் வெள்ளப்புதூர் – உத்திரமேரூர்

கட்டியம்பந்தல் மற்றும் வெள்ளப்புதூரைச் சேர்ந்த சிறுகுழுக்களின் உறுப்பினர்கள், புதிதாக சிறுகுழுக்களை ஏற்படுத்தி தங்களது பகுதிகளில் TIST- இயக்கத்தை அறிமுகம் செய்யும்படி வேண்டிக்–கொள்ளப்படுகிறது. உங்களது பகுதியிலிருந்து குறைந்தபட்சம் 40 சிறுகுழுக்கள், குறுகிய இடைவெளியில் சந்திக்கும் அளவில் இருக்க வேண்டும். ஆரம்ப நிலையில் ஒவ்வொரு சிறுகுழுவும் குறைந்தபட்சம் 1000 மரங்களை நடுமளவிற்கு சக்தி வாய்ந்தவைகளாகவும், அடுத்த 5 ஆண்டுகளில் இதன் அளவை 30% அதிகரிக்கும்படியும் இருத்தல் வேண்டும்.

கடந்த பிப்ரவரி 2007–ல் வெள்ளப்புதூரைச் சேர்ந்த அருள்பெருஞ்சோதி சிறு குழு மூன்று சிறுகுழுக்களை TIST இயக்கத்திற்கு அறிமுகம் செய்து வைத்தது. TIST இயக்கத்தின் சார்பில் அருள்பெருஞ்சோதி சிறு குழுவிற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**Members of Kattiampandal & Vellaputur**

**கட்டியம்பந்தல் மற்றும் வெள்ளப்புதூரைச் சேர்ந்த சிறுகுழுக்களின் உறுப்பினர்கள**







## Ulundai & Kodungalur of Mel Kodungalur

During the month of February 2007, 5 new Small Groups joined TIST Program from Ulundai & Kodungalur area. These new Small Groups come under Mel Kodungalur Node. Mel Kodungalur will become the first Cluster in TIST Program by end of March 2007. A cluster is where a minimum of 40 groups are located that are all within walking (or bicycling) distance of each other. This way the groups can hold cluster meetings where they can walk to or bicycle to. TIST looks forward to have Cluster formation to train Small Groups more efficiently.




## உளுண்டை மற்றும் கொடுங்கலூர் – மேல் கொடுங்கலூர்


கடந்த பிப்ரவரி, 2007–ல் உளுண்டை மற்றும் கொடுங்கலூர் பகுதியிலிருந்து 5 சிறு குழுக்கள் TIST இயக்கத்தில் சேர்ந்துள்ளன. இவை மேல் கொடுங்கலூர் மண்டலத்தில் உள்வாங்கின்றன. மேல் கொடுங்கலூர், TIST- இயக்கத்தின் முதல் பிரிவாக மார்ச், 2007–ன் முடிவிலிருந்து இயங்கத் தொடங்கும். ஒரு பிரிவு என்பது சைக்கிளில் செல்லும் இடைவெளியில் 40 சிறு குழுக்களை உள்ளடக்கியப் பகுதியாகும். இதன் மூலமே ஒவ்வொரு மண்டலத்திலும் கூட்டம் நடைபெறும். இதுபோல், பிரிவுகள் பிற்காலத்தில் ஏற்படுத்தி, பயிற்சிக்கு ஏதுவாக செயல்படுவதை TIST இயக்கம் எதிர்நோக்கியுள்ளது.

## TIST India expanding at Tiruvallur District

Last three months, TIST program reached several villages at Tiruvallur District. Several new Small Groups have joined TIST India from




Tiruvallur District. Villages like Placepalayam, Allikuli, Thimmaboopalapuram and Kammavarpalayam of Tiruvallur District are under TIST Program. During the month of February, 50 new Small Groups were recruited in and around these 4 villages. This is the 2nd Cluster for TIST Program. These 50 new Small Groups are planning to have nursery till end of June 2007. After June 2007, during the rainy season all the seedlings from the nursery would be transplanted.




## திருவள்ளூர் மாவட்டத்தில் விரிவாக்கப்பட்ட TIST- இயக்கம்

கடந்த மூன்று மாதங்களில், திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் **TIST**-இயக்கம்




செயல்படத் தொடங்கியுள்ளது. பல்வேறு சிறுகுழக்கள் இந்த மாவட்டத்திலிருந்து TSIT – இயக்கத்தில் சேர்ந்துள்ளன. பிலேஸ்பாளையம், அல்லிகுள்ளி, திம்மபூபபாளபுரம் மற்றும் கம்மவர்பாளையம் போன்ற கிராமங்கள் TIST – இயக்கத்தின் கீழ் வந்துள்ளன. பிப்ரவரி மாதத்தில் 50 சிறுகுழுக்கள் இந்தக் கிராமங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது **TIST**-ன் இரண்டாவது பிரிவாகும். இந்த 50 சிறுகுழுக்களும் வரும் ஜூன், 2007 வரை நாற்றங்கால் அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளனர். அதன்பின்பு, மழைக்காலத்தில் கன்றுகளை நடவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## TIST Small Group Eligibility Requirements

**Here are the main requirements that have to me met by Small Group to qualify for the TIST Program**

1. There should be 6 to 12 members in your Small Group from at least 3 different families.
2. Each Small Group should have a minimum of 1,000 live trees within 1-year after joining the TIST program.
3. Each Small Group should have a minimum of 5,000 live trees within 5-years after joining the TIST program.
4. Your Small Group should replant trees that die, for any reason, each year for at least 20 years
5. All Small Groups should sign the Greenhouse Gas contract.
6. TIST will pay US$ 0.03 (Rs. 1.50) per live tree per year (please review Greenhouse gas contract for more details on payment)
7. Tree species that are treated as bushes or hedges (less than 4 meters tall) would not be counted as TIST trees.
8. Trees planted at a spacing of less than 2 meters will not be counted as TIST trees.
9. TIST will allow harvesting of live trees that are 10 years or older. However, total trees harvested in any year should not exceed 5% of the group's total live trees.

## TIST சிறு குழுவிற்கான அடிப்படை–த்தகுதிகள்

**TIST–இயக்கத்தின் சிறுகுழுவாக அங்கீகரிக்கப்படுவதற்கான அடிப்படைத் தேவைகள் கீழே தரப்பட்டுள்ளது**

1. குறைந்தபட்சம் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் ஒரு சிறு குழுவில் இடம்பெற வேண்டும்.
2. ஒவ்வொரு குழுவும், TIST–ல் சேர்ந்த ஒரு வருடத்தில் குறைந்தது 1000–உயிருள்ள மரங்களை வைத்திருக்க வேண்டும்.
3. ஒவ்வொரு குழுவும், ஆரம்பித்த 5 ஆண்டுகளில், 5000–ம் மரங்களை வைத்திருத்தல் அவசியம்.
4. ஒவ்வொரு குழுவும், இறந்துவிட்ட மரங்களுக்கு பதில்மரங்கள் தொடர்ந்து 20 ஆண்டுகளுக்கு நட்டு வைத்திருத்தல் அவசியமாகும்.
5. அனைத்து சிறுகுழுக்களும் பசுமைச்குடில் வாயு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும்.
6. TIST ஒரு உயிருள்ள மரத்திற்கு US$ 0.03 (Rs.1.50) ஒருவருடத்திற்கு வழங்குகின்றது. (மேலும் விபரங்களுக்கு பசுமைக் குடில்வாயு ஒப்பந்தத்தைப் படிக்கவும்).
7. 4 மீட்டர் உயரத்திற்கும் குறைவாய் வளர்ந்துள்ள மரங்கள் TIST–மரங்களால் கணக்கிடப்படமாட்டாது.
8. சுமார் 2 மீட்டர் இடைவெளிக்குக் குறைவாய் நடப்பட்டக் கன்றுகள் கூஐளுகூ–மரக்கன்றுகளாகாது.
9. மரங்கள் 10 வருங்கள் கழிந்த பின்புதான் வெட்ட அனுமதிக்கப்படும். எனினும், ஒருகுழுவின் 5%–க்கும் குறைவான மரங்களே ஒரு வருடத்தில் வெட்டமுடியும்

10. Each Small Group should have less than 33% "short rotation trees" (example Eucalyptus). Present groups who have planted much more than 33% short rotation trees will have five years (until 2012) to plant additional trees and or harvest present trees until they meet this requirement.

11. TIST Small Groups should allow TIST quantifiers to come and quantify their trees once a year. Small Groups should organize with other Small Groups in their area to provide food and shelter for the quantifiers during these annual quantification visits.

12. Members of each Small Group should meet together to share ideas and best practices every week. If meeting every week is not possible then group members should meet at least once a month.

13. Small Group members should provide proof of land ownership or control for land where they have planted TIST trees.

14. Small Group members should participate in TIST training to help develop and share best practices with other TIST groups.

15. The area where your Small Group is located should have other Small Groups, that are all within walking distance of each other, that have planted a combined total of 100,000 live trees within 1-year with a potential to plant a combined total of 300,000 trees in 5-years.

10. ஒவ்வொரு சிறுகுழுவும் 33% க்குள்ளேயே குறுகியகால மரங்களை (எ.கா. யூக்கலிப்டஸ் மற்றும் சவுக்கு) நடமுடியும். தற்போது மொத்தத்தில் 33ளூ க்கும் மேல் உள்ள குழுக்கள் 2012–க்குள் மேலும் மரங்களை நடவு செய்தல் அல்லது தற்போதைய மரங்களை வெட்டுவதற்குள், மரங்கள் நடவு செய்தல் வேண்டும்.

11. TIST–சிறுகுழுக்கள் TIST–நிறுவனத்திலிருந்து வருபவருக்கு மரங்களை வருடத்திற்கு ஒருமுறை அளவிடுவதற்கு அனுமதிக்க வேண்டும். மேலும், ஏனைய குழுக்களோடு ஒன்றிணைந்து, மர அளவிடுபவர்களுக்கு உணவு மற்றும் தங்கும் வசதிகளைச் செய்து தர வேண்டும்.

12. ஒவ்வொரு வாரமும், உறுப்பினர்கள் குழுக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு, சிறந்த செயல்பாடுகளை பரிமாறிக்கொள்ள வேண்டும். வாரக்கூட்டம் முடியவில்லையெனில் குறைந்தபட்சம் மாதம் ஒரு முறையாகினும் கூட்டம் நடைபெற வேண்டும்.

13. TIST–மரம் நடும் நிலத்திற்கான ஊர்கிதப்பட்டா அல்லது அனுபவ உரிமையை சிறுகுழுக்கள் தாக்கல் செய்யவும்.

14. TIST–பயிற்சியில் சிறுகுழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு ஏனைய குழு உறுப்பினர்களோடு தங்களது சிறந்த செயல்பாடுகளை விவாதிக்க வர வேண்டும்.

15. சிறு குழு அமைந்துள்ள இடம், மற்ற குழுக்களோடு சேர்ந்தார்போல் இருத்தலோடு, ஒட்டுமொத்தமாக அந்த இடத்தில் 1,00,000 உயிர் மரங்களை ஒரு வருடத்தில் நடவு செய்வதற்கு ஏதுவாகவும், அடுத்த 5 ஆண்டுகளில் சுமார் 3 லட்சம் மரங்கள் வளர்ப்பதற்கு வாய்ப்புள்ளதாகவும் அமைக்கவும்.

## What type of trees to grow?

Trees are important tools in the fight to stave off global warming, because they absorb and store the key greenhouse gas emitted by our cars and power plants, carbon dioxide (CO2), before it has a chance to reach the upper atmosphere where it can help trap heat around the Earth's surface.

While all living plant matter absorbs CO2 as part of photosynthesis, trees process significantly more than smaller plants due to their large size and extensive root structures. In essence, trees, as kings of the plant world, have much more "woody biomass" to store CO2 than smaller plants, and as a result are considered nature's most efficient "carbon sinks." According to the U.S. Department of Energy (DOE), tree species that grow quickly and live long are ideal carbon sinks.

We have several huge and long-standing trees like Neem, Tamarind, Mango, Hawaiian-Giant (Subapul) and Cotton that absorb great amount of CO2 and they also give good revenue. The Balaji Small Group of Mel Kodungalur have 300 cotton trees in their groves, which gets them Rs.15,000 to Rs.20,000 in addition to the TIST Voucher payment.

The Great Banyan tree, which grows tall and spreads enormously, has a crown circumference of over 330m. Banyan trees have latex. There is a belief that latex trees attract rain clouds.

## எந்த வகையான மரங்களை வளர்க்கலாம் ?

சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும், பசுமைக்குடில் வாயுக் கெடுக்கும், நமது காற்று மண்டலத்தைக் கெடுக்கும், கரியமிலவாயுவை, கார் மற்றும் சக்தி உபகரங்கள் வெளியிடுகின்றன. இந்த கரியமில வாயுவை உள்ளிழுத்து காற்று மண்டலத்தைக் காப்பதோடு உலக வெப்ப அளவையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க மரங்கள் உதவுகின்றன.

மரங்களின்தலைகள் மற்றும் ஆழமாகச் செல்லும் பெருவகை மரங்களின் $CO_2$ எனும் கரியமலை வாயுவை பெரியளவில் உறிஞ்சும் சக்தியுள்ளவைகள். அமெரிக்க சக்திக்கான துறை, நீண்டநாட்கள் உயிர்வாழும், எளிதில் வளரும் மரங்களே கரியமிலவாயுவை உறிஞ்சும் மூலங்கள் என்று கூறகின்றது.

நம்மிடையே உள்ள பெரிய மற்றும் நீண்டு நிலைத்து நிற்கும் மரங்கள் வேம்பு, மா, சுபாபுல் மற்றும் இலவம் போன்றவைகள் கரியமிலவாயுவை உறிஞ்சும் திறன் கொண்டவைகள் மற்றும் வருமானமும் தரக்கூடியவைகள். மேல் கொடுங்கலூரில் உள்ள பாலாஜி சிறுகுழுவிடம் 300 இலவம் மரங்கள் உள்ளது. இவைகள், TIST-ன் பணம் இல்லாமல் வருடம் Rs.15 ஆயிரம் முதல் Rs.20,000 வரை வருவாய் ஈட்டுகின்றது.

ஆலமரம் நீண்டு பெருத்து விழுதுகளோடு வளரும் திறனுடையது. இவை 330 மீட்டர் வரை இடத்தை அடைப்பதோடு பெரும் மழை பொழியும் தன்மையான விழுதுகளைக் கொண்டது.

## Small Groups of Vandhavasi Center

Most of the Small Groups of Vandhavasi Center were having Casuarina trees as major portion in their groves till December 2007. During January and February 2007, all the groups started nursery with different types of trees species (other than casuarinas and eucalyptus). They are all in the process of fulfilling the 30:30:40 ratio of tree species. Small Groups like Nelli, Lotus, Vasudev and Chamundeswari are very active in Node meetings and they are all introducing new Small Groups to TIST Program.

## Poetry Writing

This competition is exclusively for our Women Members. Write a short poetry on "Trees" and win exciting prizes.

## வந்தவாசி மையத்தின் சிறுகுழுக்கள்

வந்தவாசி மையத்தை சேர்ந்த சிறுகுழுக்கள், பெருமளவில் பாக்கு மரங்களை டிசம்பர், 2007 வரை வளர்க்கின்றனர். ஜனவரி–பிப்ரவரி 2007–ல் இந்தக்குழுக்கள் பாக்கு மற்றும் யூக்களிப்டஸ் கன்றுகளோடு சேர்த்து ஏனைய கன்றுகளையும் 30.30.40 என்ற விகிதத்தில் வளர்க்கின்றனர். சிறுகுழுக்களான நெல்லி, ரோஜா, வாசுதேவ் மற்றும் சாமுண்டீஸ்வரி ஆகியவைகள் மண்டல கூட்டங்களில் மிகுந்த உற்சாகத்துடன் புதுகுழுக்களை TIST-ல் அறிமுகப்படுத்தியும் சிறப்பாய் செயல்படுகின்றனர்.

## பாடல் எழுதுதல்

நமது இயக்கத்தின் பெண் உறுப்பினர்களுக்கு மட்டுமே பாடல் எழுதும் போட்டி நடத்தப்படுகின்றன 'மரங்கள்' என்ற தலைப்பில் சிறுபாடல்களை எழுதி, சிறந்தப் பரிசினைத் தட்டிச் செல்லுங்கள்.

# நோட் கூட்ட அட்டவணை

| நோடு | உட்பட்ட கிராமங்கள் | நோட் மையம் | கிழமை | காலம் | நேரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | முதல் | வரை |
| செம்முனடி, வாசி மற்றும் மேல் கொடுங்கலூர் | சிங்கப்பள்ளி உளுந்தை மேல் கொடுங்கலூர் காட்டுக்கொல்லி | வன்தவாசி, மேல் கொடுங்கலூர் குன்னவாக்கம், செம்முனடி | முதல் சனி<br>03.03.2007<br>07.04.2007 | மாலை<br>மாலை<br>மாலை | 3.00<br>5.30<br>7.00 | 4.00<br>6.30<br>8.00 |
| கட்டியாம்பந்தல் | கட்டியாம்பந்தல் வெள்ளப்புத்தூர் | கட்டியாம்பந்தல் | இரண்டாவது ஞாயிறு<br>11.03.2007<br>08.04.2007 | காலை | 9.00 | 12.00 |
| சித்தூர் | கீரானல்லூர், சித்தூர், நந்திமேடு, மொளச்சூர்,. ஆட்டுப்புத்தூர் சிங்காடிவாக்கம் மருதம், ஜம்போதை | மொளச்சூர் மருதம், ஜம்போதை | மூன்றாவது ஞாயிறு<br>18.03.2007<br>15.04.2007 | காலை | 8.30 | 10.30 |
| காந்தூர் | சோகண்டி காந்தூர் | மொளச்சூர் | மூன்றாவது ஞாயிறு<br>18.03.2007<br>15.04.2007 | காலை | 11.00 | 01.00 |
| ஆண்டிச்சிறு வல்லூர் | வேடல், சிறுவல்லூர் ஆண்டிச்செருவல்லூர் கொட்டவாக்கம் மேல்ப்படவூர், சிறுவல்லூர், மேட்முக்காலனி | வேடல் | நான்காவது சனி<br>24.03.2007<br>28.04.2007 | மாலை | 3.00 | 5.00 |

TIST
**TIST India** : New No.52, Guru Ram Flats, Flat D, Venkat Ratnam Nagar, Adyar 600020. Phone : 044 24411637, Mobile : 9840299822, Web: www.tist.org
**TIST USA** : Phone : 001 9188511917 Email : rameshn@tist.com